MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

சு.தமிழ்ச் செல்வியின்

அளம், கீதாரி புதினங்களில் நாட்டார் பாட்டியல்

பேரா மு சிவசக்தி

தமிழ்த்துறை
அர்ஜூன் தொழில்நுட்பக் கல்லூரி
கோயம்புத்தூர்

Nattar Patiala in S..Tamil Selvi's
Alam and Geeta novels

Prof.M.SIVASAKTHI

DEPARTMENT OF TAMIL
ARJUN COLLEGE OF TECHNOLOGY
COIMBATORE

ABSTRACT

The time period in which language emerged cannot be defined. Similarly, the time period in which 'folk literature', also known as 'oral literature' and 'folk literature', emerged cannot be defined. Language emerged as soon as man emerged. As soon as language emerged, 'folk literature', also known as 'folk songs', may have emerged. Therefore, it can be said that folk songs also appeared around the same time as the emergence of man. 'Folklore' is the study of the songs, stories, customs, beliefs, traditions, cultures, civilizations, proverbs, etc. of the people of the country. This is also called 'folklore'. If literary works are the mirror of time, folk literature can be called the mirror of society. This literature expresses the experiences, feelings, and emotions of the people as they are and as they are perceived. Known as reservoirs of experience, these are also storehouses of the ideas of the people.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

One of the special features of Nattar Patiala is that the creators themselves become the characters. Regarding the folk songs that have achieved such distinctions, this study explains the entries of folk songs featured in A. Tamil Selvi's novels 'Alam' and 'Geethari'.

முன்னுரை

மொழி தோன்றிய காலத்தை வரையறுக்க முடியாது. அதுபோல, 'வாய்மொழி இலக்கியம்' என்றும் நாட்டுப்புற இலக்கியம் என்றும் அழைக்கப்படும் 'நாட்டார் இலக்கியம்' தோன்றிய காலத்தையும் வரையறுக்க இயலாது. மனிதன் தோன்றியபோதே மொழி தோன்றியது. மொழி தோன்றிய போதே, 'நாட்டார் இலக்கியம்' இலக்கியம் எனப்படும் 'நாட்டார் பாடல்கள்' தோன்றி இருக்கலாம். எனவே, மனிதன் தோன்றிய சமகாலத்திலேயே நாட்டார் பாடல்களும் தோன்றின என்று கூறலாம். நாட்டார் மக்களின் பாடல்கள், கதைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், பண்பாடுகள், நாகரிகங்கள், பழமொழிகள் போன்றவற்றினைப் புலப்படுத்துவதே 'நாட்டார் இயல்' ஆகும். இதனை, 'நாட்டுப்புறவியல்' எனவும் கூறுவர்.

எழுத்திலக்கியங்களைக் காலக்கண்ணாடி எனின் நாட்டார் இலக்கியத்தைச் சமுதாயக் கண்ணாடி என அழைக்கலாம். இவ்விலக்கியம், நாட்டாரின் அனுபவங்கள், உணர்வுகள், உணர்ச்சிகள் போன்றவற்றை உள்ளது உள்ளபடியும், உணர்ந்ததை உணர்ந்தபடியும் வெளிப்படுத்துவனவாகும். அனுபவங்களின் குவியல்களாக அறியப்படும் இவை நாட்டார் மக்களின் கருத்துச் சேமிப்புக் கிடங்குகளும் ஆகும்.

படைப்பாளிகளே பாத்திரங்களாக அமைவது நாட்டார் பாட்டியலின் சிறப்புக் கூறுகளுள் ஒன்றாகும். இத்தகையச் சிறப்புகளைப் பெற்ற நாட்டார் பாட்டியல் குறித்து, இவ்வியல் அ. தமிழ்ச்செல்வியின் புதினங்களான 'அளம்', 'கீதாரி'யில் இடம்பெற்ற நாட்டார் பாடல்களின் உள்ளீடுகளை விளக்குகின்றது. இங்கு, 'பாட்டியல்' என்னும் சொல் 'பாடல்களைக் கொண்ட இயல்' என்ற பொருளில் கையாளப்படுகிறது.

"பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை யில்லையடா"1

என்றும்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

"பாட்டு முடியும்வரை பாரறியேன் விண்ணறியேன்"2

என்று பாரதியார் கூறும் கருத்தோடு தொல்காப்பியர், செய்யுளியலில் யாப்பின் ஏழு உறுப்புகளுடன் முதலாவதாகப் 'பாட்டு' எனக் கூறும் கருத்தையும் ஒப்பிட்டு ஆராய்ந்தால் பாட்டின் தனித்துவம் தெளிவாகப் புலப்படும். மேலும்,

"ஏற்றநீர்ப் பாட்டி னிசையினிலும், நெல்லிடிக்குங்

கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சு மொலியினிலும்

சுண்ணமிடிப் பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்

பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்

வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்

கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்

வேயின் குழலோடு வீணைமுத லாமனிதர்

வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி

நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்

பாட்டினிலும், நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்" 3

எனவும் பாடுவதன் மூலம் நாட்டார் பாடல்களின் பல்வேறு கூறுகள் பாரதியாரை கவர்ந்துள்ளன என அறியலாம்.

பாட்டும் தொல்காப்பியமும்

தொல்காப்பியர் யாப்பின் ஏழு வகைகளை,

"பாட்டு உரைநூலே வாய்மொழி பிசியே

அங்கதம் முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்"4

என்ற நூற்பாவில் குறிப்பிடுவார். ஏழினுள் முதலாவதாகச் சுட்டப்பெறுவது, 'பாட்டு' ஆகும். இதன்மூலம் 'பாட்டு' என்று அழைக்கப்படும், 'பாடல்' எத்தகையச் சிறப்புடையது என அறியலாம். இப்பாட்டு வகையுள் ஒன்று, 'நாட்டார் பாடல்' ஆகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

நாட்டார் பாடல்களும் தொல்காப்பியமும்

நாட்டார் பாடல்களைத் தொல்காப்பியர், 'பண்ணத்தி' என்ற சொல்லால் புலப்படுத்துவதை,

"பாட்டினம் கலந்த பொருள வாகிப்

பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே" 5

என்ற நூற்பாவால் உணரலாம்.

'பண்' என்ற இசையோடு இணைந்த பாடலை 'நத்தி' அதாவது விரும்பி வருவதால், 'பண்ணத்தி' என்ற சொல் பொருத்தமானதே ஆகும். இசையோடு இணைந்த பாடலே மக்களால் பெரிதும் விரும்பப்படுவதும் ஆகும். இவை, பண்டைக்கால மக்களால் விரும்பிப் பாடப்பட்டவையும் ஆகும்.

நாட்டார் -விளக்கம்

'நாட்டார்' என்று வழங்கும் சொல்லிற்குத் தமிழ்ப் பேரகராதி,

"1. தேசத்தார்

2. நாட்டு மகாசனம்

3. நாட்டாண்மைக்காரர்

4. கள்ளர்,செம்படவர் முதலிய சில சாதியினரின் பட்டப் பெயர்கள்"

6

என்று விளக்கம் தருகின்றது.

மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில், **"நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த"7** என்று பாடுகின்றார். **"Folk songs என்பதற்கு 'நாட்டார் பாடல்கள்' என்ற சொல் மிகப் பொருத்தமானதாகும்"8** என்று தே. லூர்து கருதுவார். இக்கருத்துக்களின் மூலம், 'நாட்டார்' என்ற சொல், 'நாட்டுப்புறத்தார்' என்னும் பொருளில் கையாளப்படுவதனை உணரலாம். இங்கு, 'நாட்டார்' என்னும் சொல் தமிழ்நாட்டில் வாழும் ஒரு குறிப்பிட்ட சாதியின் பெயராகவும் வழங்கி வருகின்றது என்ற செய்தி

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

சுட்டத்தக்கது. உரையாசிரியர்களுள் ஒருவராக ந.மு. வேங்கடசாமி நாட்டார் சிறந்து விளங்கினார்.

கிராமத்தை 'நாட்டுப்புறம்' எனவும், கிராமத்தாரை 'நாட்டுப்புறத்தார்' எனவும் சுட்டும் வழக்கம் தமிழ்நாட்டில் உள்ளது. எனவே 'நாட்டுப்புறத்தார்' என்ற சொல்லே நாட்டார் எனச் சுருங்கி வழங்கி வருகிறது எனலாம்.

நாட்டார் பாடல்கள்

நாட்டார் இயல்புகளைக் குறிக்க **"Folk lore"** என்ற ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்தினர். இதில் **""Folk' என்ற சொல் படைப்பவர்களையும் 'Lore' என்ற சொல் படைக்கப்படுவனவற்றையும் குறிக்கின்றன"** என்று ஆறு. இராமநாதன் கூறுவார். ஆனால் சங்கர் சென் குப்தா, **'Folk'** என்பதற்கு இருவகைப் பொருள்களைக் கூறுகின்றார். அவை, **"ஒன்று, நாட்டுப்புற மக்களைக் குறிப்பது; இரண்டு, மொழி, தொழில், சமயம் ஆகியவற்றை அடிப்படைக் கூறுகளாகக் கொண்ட எந்தவொரு குழுவையும் குறிப்பது"10** என்பனவாகும். இவ்விரு கருத்துகளை ஒப்பிடுகையில் **'Folk'** என்ற சொல் நாட்டாரைக் குறிக்கின்றது என்ற பொதுத்தன்மை அடங்கியிருக்கக் காணலாம்.

"ஆங்கிலத்தில் நாட்டுப்புற இயலை **'Folk lore'** என்று அழைக்கின்றனர். இச்சொல்லை **1846-இல்** தான் வில்லியம் தாமசு என்பவர் முதன்முதலில் பயன்படுத்தினார். அதற்கு முன்னர் இதற்குப் பதிலாக **'Popular antiquities'** அல்லது **'Popular Literature'** என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இச்சொற்களில் நாட்டுப்புற இயலைப் பற்றிய முழுமையான பொருள் விளக்கம் இல்லை. எனவேதான் இச்சொற்கள் கைவிடப்பட்டு **'Folklore'** என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது"**11**

"நாட்டுப்புற இயலானது, பழங்கால - தற்கால மக்களின் மரபுவழிப்பட்ட படைப்புத் தொகுதிகளைக் கொண்டிருக்கிறது. இவற்றை, ஒலிகளையும் வார்த்தைகளையும் யாப்பிலும் உரைநடையிலும் பயன்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். இது நாட்டுப்புற நடனங்களையும், மூடநம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும், நடனங்களையும், கூத்துக்களையும் கொண்டிலங்குகின்றது" 12 என்று ஜோன்ஸ் பால்ஸ் கூறுகிறார்.

மேலும் நாட்டார் பாடல்கள் குறித்து **"எழுத்தறிவில்லாத நாட்டுப்புறத்து மக்களிடையே தொன்று தொட்டு வழங்கி வருபவை.**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

இவற்றை இயற்றியவர் யாவர்? அவை தோன்றிய காலம் யாது ? என அறுதியிட்டுக் கூறமுடியாது. செவி வழியாகவே தலைமுறைதோறும் அவை நீடித்து வந்துள்ளன. இசை என்ற சிறகுகள் இருப்பதாலேயே எளிதில் பரவும் தன்மை பெற்றிருக்கின்றன. இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தும் மக்களின் உள்ளக்கிளர்ச்சிகளை வெளியிடும் தன்மை வாய்ந்தனை"13 எனக் கூறப்படும் செய்திகள் கவனத்தில் கொள்ள வேண்டுவனவாகும்.

இப்பாடல்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாலோ, இலக்கண-இலக்கியப் புலமை பெற்றவர்களாலோ பாடப்படுபடுவன எனக் கூற இயலாது. நா. வானமாமலை கூறுவது போல, **"நாட்டுப்பாடல் என்றால் ஆராய்ச்சி செய்பவருக்காக யோசனை செய்து பாடப்படுவது அல்லது எழுதப்படுவது அல்ல. நிகழ்ச்சிகளின் தாக்கத்தால் எழுகிற உணர்ச்சியும், சிந்தனையும் பாடல் உருவத்தில் சிருஷ்டிக்கப்படுகின்றன"14**

கேலிப்பாடல்கள்

நாட்டுப்பாடல்களில் ஒருவருக்கொருவர் கேலி பேசி சிரித்து மகிழ்வது அன்றாடம் காணப்படும் ஒரு வழக்கமான செயலாகும். பழைமை மாறாத நாட்டாரிடம் இவை போன்ற பாடல்கள் எளிய வடிவிலும் நிகழ்கின்றன என்பதை சு. தமிழ்ச்செல்வியின் புதினம் புலப்படுத்துகின்றது.

'அளம்' நாவலில் வடிவாம்பாளின் தம்பி கோவிந்தன் குழந்தைகளுடன் விளையாடும்போது பாடும் பாடல் குழந்தைகளை உருவகப்படுத்தும் விதத்தினையும் கேலித்தன்மையின் இயல்பினையும் தெளிவாகக் காட்டுகின்றன.

"ஆகா ஆனந்தமானே
யாங் ராசாக்குட்டியே...
ஒன்ன கலியாணம் பண்ணி
நா வெளயாடப் போறங்.... 15

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

இங்குக் குழந்தை மானாக உருவகிக்கப்படுகின்றது. பாடல் பாடுபவர்க்கும் பாடலுக்குரிய குழந்தைக்கும் இடையிலான உறவு உரிமை வெளிப்படுகின்றது. விளையாட்டுப் பாடல்களில் கேலிப்பாட்டு ஒரு வகையாகும்.

இப்பாடல்கள் குறித்து அய்யாசாமி அவர்கள் கூறும் கருத்துச் சுட்டிக்காட்டத்தக்கது. அதுவே, **"ஊர்த் தெருவில் புழுதியளைந்து மண்வீடு கட்டுகிறது. சின்னஞ்சிறு சட்டிப்பானை வைத்துச் சோறாக்குகிறது. தந்தையைப்போல வயலுக்குப் போவதாக நடித்துக் காட்டுகிறது. பிறகு அறிவு வளரவும் வேறு விளையாட்டுகளில் நாட்டம் கொள்கின்றது. இந்த விளையாட்டுகளில் கணக்கு வைக்கவும் களைப்பு வராமல் இருக்கவும் பாடல் தோன்றுகிறது 16** என்பதாகும்.

எதிர்ப்பாட்டு

கருத்துகளை பாடல் மூலமே பரிமாறிக் கொள்ளுதல் என்பது நாட்டார் பாடல்களின் தனித்தன்மைகளுள் ஒன்றாகும். இது இப்பாடலின் தனிச்சுவையும் ஆகும். 'கீதாரி' புதினத்தில் சாத்தப்பன் - ராமு என்ற இரு நண்பர்கள் பாடுகின்றனர்.

"சந்திரரே சூரியரே
சாதிப் பகவானே
இந்திரர நோக்கியல்லோ
எடுத்தனதே சிறுதெம்மாங்கே
பாட்டுக்கும் பாட்டெடுப்பேன் - நம்
பாட்டனையும் தோக்கடிப்பேன்
எதிர்ப்பாட்டு படிக்கலேன்னா
ஏணிவச்சி பல்லொடொப்பேன்"17

இதில் 'சந்திரரே சூரியரே' என்ற தொடர் தமிழரின் இயற்கை வழிபாட்டு நெறியினையும், 'இந்திரர நோக்கியல்லோ' என்ற தொடர் உருவ வழிபாட்டு முறையினையும் புலப்படுத்துகின்றன. 'பாட்டனையும் தோக்கடிப்பேன்' என்ற தொடர் நாட்டாரின் நகையுணர்வையும்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

'ஏணிவச்சி பல்லொடொப்பேன்' என்ற தொடர் உறவுமுறை உரிமையியுைம் வெளிப்படுத்தி நிற்கக் காணலாம். இப்பாடலோடு இன்றைய காலச் சூழலை எண்ணுகையில் **"பழம் பாட்டின் சில சொற்கள் சிறுவர் விளையாட்டில் இடம்பெறக் காணலாம். கால வளர்ச்சியின் விளைவு சிறுவர் விளையாட்டினைப் பாதிக்கவில்லை" 18** என்றே கருதத் தோன்றுகின்றது.

கணவன் பிரிவிற்கு மனைவி வருந்துதல்

வெளிநாட்டிற்குப் பொருள் தேடச் சென்ற கணவன் வீடு திரும்பாத நிலையில் மனைவி சுந்தராம்பாள் பாடுகின்றாள். 'அளம்' நாவலில் இடம்பெறும் இப்பாடல் கணவனைப் பிரிந்த மனைவியின் ஏக்கத்தைப் புலப்படுத்துகின்றது.

"சிட்டுக்குருவியள.... செமலோரத்து பச்சியளா...
சீமக்கி போனியளா? செவந்தகனி தின்னியளா?
செடிபெறக்கும் கொண்டியளா?... யாஞ் சீமான பாத்தியளா...?
பச்ச குருவியளா? பட்டணம்தான் போனியளா
பழுத்த பழம் தின்னியளா...? பசிஎறக்கம் கொண்டியளா...?
யாம் பழிகார பாவிய பாத்தியளா...?"19

சிட்டுக்குருவியைப் போலக் கட்டுப்பாடின்றி கணவன் சுற்றித் திரிகின்றான் என்பதை இப்பாடல் நயம்பட உணர்த்துகின்றது.

கணவனின் பிரிவை எண்ணி வருந்தும் பெண்ணின் மனநிலையைச் சுந்தராம்பாள் பாத்திரம் வாயிலாக சு. தமிழ்ச்செல்வி புலப்படுத்துகிறார்.

பருவங்களுக்கு ஏற்ப மலர்கள் மலர்கின்றன. ஆனால் பருவங்கள் மாறினாலும் அதை உணர்ந்து நீண்டகாலமாகப் பிரிந்த கணவன் வரவில்லை. மணம் வீசும் மலர்கள் சூடுவாரின்றி ஆற்றிலும் குளத்திலும் வாடி வீணாகும். இந்த மலர்களின் நிலையில் மனைவி காட்சிப்படுத்தப்படுகின்றாள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

"அல்லியும் தாமரையும்
ஆத்தடச்சி பூத்தாலும்
அல்லி கொணமறிஞ்சி என்ன
ஆதரிக்க யாருமில்ல
கொட்டியும் தாமரையும்
கொளத்தடச்சி பூத்தாலும்
கொட்டி கொணமறிஞ்சி – என்ன
கொண்டணைப்பார் யாருமில்ல..
காத்துக் கண்ணாடி
கண்ணங்கையி லாந்தருதான்
கரிபுடிச்சி மங்காம – நா
கவலவச்சி மங்குறனே…
தூரத்துக் கண்ணாடி
துலுக்கங்கையி லாந்தருதாங்
துருப்புடிச்சி மங்காம - நா
தொயரம் வச்சி மங்குறனே" 20

'லாந்தர்' என்பது கண்ணாடி குடுவைக்குள் மண்ணெண்ணெய், திரி ஆகியவற்றின் உதவியோடு எரியும் விளக்கைக் குறிக்கும். இவ்விளக்கு நீண்ட நேரம் எரிந்தால் கண்ணாடி மீது கருமை படரும்; அதுபோல பிரிந்த கணவன் நீண்ட நாட்கள் வராவிடின் மனைவியின் மனதை, 'கவலை' என்ற கருமை சூழும்; ஒளி மங்கும்; அதாவது உடல் நலிவுறும். உபயோகிக்காத பொருள் துருப்பிடித்து அழிவதுபோல் மனைவி துயரத்தால் மயங்குகின்றாள்.

இங்கு மண்ணெண்ணெய் விளக்கை மையப்படுத்திப் பாடக்காரணம் நாட்டார் பெண்கள் மின்விளக்கற்ற வறுமைச் சூழலில் வாழ்கிறார்கள் என்பதைக் குறிப்பதற்காக எனலாம். மேலும், எண்ணெய் தீர்ந்தவுடன் எரியும் திரி அணைந்துவிடும். 'திரி' போன்ற மனைவி, 'அணைதல்' என்ற இறப்பை அடையாதிருக்க

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

வேண்டுமெனில், கணவன் என்ற 'எண்ணெய்' அவசியம் வேண்டும் என்ற உள்ளீடும் இப்பாடலில் பொதிந்துள்ளது.

இவைகளின் மூலம் கணவனைப் பிரிந்த மனைவியின் மனநிலை சிறப்பாகப் புலப்படுகின்றது.

முதியவரை மணந்த மனைவி புலம்புதல்

இளம் பெண்ணை முதியவருக்கும், இளைஞனை முதியவளுக்கும் மணம் முடித்து வைத்தலைப் பொருந்தா மணம் என்பர். பெண்ணின் பொருளாதாரச் சூழலும், பெண்ணின் உடன்பிறந்தார் எண்ணிக்கை அதிகம் என்ற வறுமைச் சூழலும் முதியவர்களின் முறையற்ற ஆசைகளும் இவ்வகை மணங்களுக்குக் காரணங்கள் ஆகின்றன.

"நரைத்த கிழவனுடன் வாழ மறுக்கும் பெண்களையும் அவனது சொற்படி வாழ மறுக்கும் பெண்களையும் நாட்டுப்புறப்பாடல்கள் தெரிவிக்கின்றன" 21 என்பதை மெய்ப்பிப்பது போல படைக்கப்பட்ட பாத்திரமாக வடிவாம்பாள் விளங்குகின்றாள். இப்பாடல் 'அளம்' என்னும் புதினத்தில் இடம் பெறுகிறது.

"கீழத்தெருவுலயே நா கெழவனுக்கு வாக்கப்பட்டேன்
வாக்கப்பட்ட மூணாம்நாளு பாக்குதிங்க பல்லு இல்ல
ஆடு வளத்தாரடி தாத்தா, அட்டியபண்ணி போட்டாரடி
மாடு வளத்தாரடி தாத்தா, மாட்டல்பண்ணி போட்டாரடி
கோழி வளத்தாரடி தாத்தா, கொலுசுபண்ணி போட்டாரடி
எல்லாம் பண்ணிபோட்ட தாத்தாபாடு முடிஞ்சிதடி
மாட்டல கயட்டுங்கடி தாத்தா மண்டையோரம் வச்சளுவ
அட்டியல கயட்டுங்கடி தாத்தா அடிமடியே வச்சளுவ
கொலுச கயட்டுங்கடி தாத்தா கொடங்கயோரம் வச்சளுவ"22

ஆடு, மாடு, கோழி ஆகியவற்றை வளர்த்தவர் அவைகளை உண்ணவில்லை; உண்ணும் வயதும் அவருக்கில்லை. உண்டால் செரிக்கும் வயதுள்ள இளம்பெண்ணைத் தான் மணக்கலாமா? என்று எண்ணவும் இல்லை. இவைகளை விற்ற பணத்தில் வாங்கிய அட்டியல்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

மாட்டல், கொலுசு ஆகியவற்றை அணியும் இளம்பெண் தனக்குப் பொருத்தமானவளா என்பதைப் பற்றி முதியவர் கருதவுமில்லை. முதியவர் வாங்கித் தந்த அணிகலன்களை அணிவதில் இளம் பெண்ணிற்கு மகிழ்ச்சியுமில்லை. கணவனை இழந்த பெண்கள் மங்கலப் பொருள்களை அணியும் வழக்கமுமில்லை. இவை போன்ற கருத்துக்கள் இப்பாடலில் பொதிந்துள்ளன.

அணிந்தால் ஆனந்தத்தைத் தரக்கூடிய அட்டியல், மாட்டல், கொலுசு ஆகியன தாத்தாவின் இறப்பால் துன்பத்தைத் தந்தன. மங்கலப் பொருள்களை மனைவி அணியப் பார்த்து மகிழ வேண்டிய முதிய கணவர் மறைந்த அவலம், விருப்பமில்லா மணத்திற்குப் பெண்ணும் பெண்ணின் பெற்றோரும் ஆட்படும் அவலம் ஆகியன பொருந்தாமணத்தின் தன்மைகளை விளக்கி நிற்கின்றன.

ஒப்பாரிப் பாடல்கள்

மனிதனுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பை அவன் பிறப்பு தாலாட்டால் சிறப்பிக்கப்படுவதையும், அவன் சிறப்பு ஒப்பாரியில் உணர்த்தப்படுவதையும் நோக்கும் போது அறிந்து கொள்ளலாம். தாய்மையின் பாசமும் பரிவும் கொப்பளிக்கும் இடங்கள் தாலாட்டும் ஒப்பாரியுமாகும். இது பெண்மைக்கே கிடைத்த வரப்பிரசாதம் ஆகும்.

தமிழில் ஒப்பாரியைப் பிலாக்கணம், பிணக்கானம், கையறுநிலை, புலம்பல், இரங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு, அழுகைப்பாட்டு என்று பலவகையாகச் சொல்லிக் கொள்வர். காலையின் ஒப்பாரியை 'அந்தி அழுகை' என்றும் ஒப்புச்சொல்லி அழுவதை 'ஒப்பாரி' என்றும், சவ ஊர்வலத்தில் ஆண்கள் ஆடிப்பாடுவதைக் 'கழிலடிப்பாட்டு' என்றும் கூறுவர்.

மேலும் ஒன்றோடு ஒன்றை ஒப்பிடும் அதன் இயல்புகளை வேறுபடுத்தியும், ஒன்றின் சிறப்பறிதல், 'ஒப்பிடல்' எனப்படும். இந்த ஒப்பிடல், 'ஒப்பிட்டு அறிதல்' எனவும் 'ஒப்பறிதல்' எனவும்படும். அதாவது முந்தைய நிகழ்வுகளோடு நிகழ்கால நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்தல் எனவுங் கூறலாம்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி ஒப்பாரியை, **"ஒப்ப + ஆரி" எனப் பிரித்து ஒப்புச்சொல்லி அழுதல்"23** எனப்பொருள் தருகிறது. தமிழ் - ஆங்கில அகராதி ஒன்று, ஒப்பாரி, **"பெண்களால் பாடப்படுவது என்றும் இறந்தவர்க்கும் அடுத்த பிற பொருள்களுக்கும் ஒப்புச் சொல்லிப் பாடுவது"24** என்றும் கூறுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

இவற்றிலிருந்து இறந்தவர்களை நினைத்து அவர்கள் மீது பாடப்படும் பாடல் ஒப்பாரி என அறிய முடிகிறது. ஒருவருடைய மனக்குறையை பிறரிடம் கூறினால் மனப்பாரம் குறையும் என எண்ணுவது இயற்கையே மற்றும் மனித இயல்பும் கூட. இறந்தவரின் ஆவி ஒப்பாரிகளால் சாந்தி அடைவதாகவும், ஒப்பாரி பாடாவிட்டால் ஆவிகள் துன்புறும் என்ற நம்பிக்கை உண்டு. மேலும் ஆவிகள் இவ்வுலகம் விட்டு மறு உலகம் செல்ல ஒப்பாரிகள் இயற்கையாக உதவுகின்றன என்றும் மக்கள் நம்புவதையும் அறிய முடிகிறது.

இக்கருத்தின் அடிப்படையிலேயே சு. தமிழ்ச்செல்வி இறப்பு நிலையில், இருதாரங்களின் புலம்பல்களை தம் படைப்பில் பதிவு செய்துள்ளார். எனவே இரு மனைவியர் கணவனுக்காகப் பாடுதல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இரு தாரங்களின் புலம்பல்கள்

இரு பெண்களை மணந்தவர்கள் அம்மனைவியரை ஒரே வீட்டில் வைத்திருப்பது உலகியலில் பெரும்பான்மை என்றும் தனித்தனி வீட்டில் வைத்திருப்பது சிறுபான்மை என்றும் கூறலாம். இத்தகையோர் குறித்து, **"ஒரே வீட்டில் உடனுறைந்து வருங்கால் ஒருவருக்கொருவர் தன்தன் நன்மைகளுக்காகச் சொல்லும் சொற்களினால் எதிர்த்து எதிர்த்துப் பேசி வருவர். இன்னும் இதனை 'சக்களத்திப் போர்' என்பர். களத்தி என்பது சக்களத்தி என வழங்கப்படுகின்றது" 25** என அ.கி. நாயுடு கூறுவார்.

நாட்டுப்புறங்களில் ஒருவருக்கொருவர் கேலி செய்து பாடும் பாடல்கள் 'ஏசல் பாடல்கள் என்றும், எசப்பாடல்கள்' என்றும் அழைக்கப்படுகின்றன. மேலும் தெம்மாங்கைப் போன்று போட்டா போட்டிப் பாடல்கள், எதிர்ப்பாட்டுகள், குருவிக்காரன் பாடல்கள், தங்கரத்தினப் பாடல்கள், ராசாத்திப் பாடல்கள், தர்க்கப் பாடல்கள் போன்றவை காதலை வெளிப்படுத்துவனவாக அமைகின்றது.

ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விளித்துக் கொள்ள பலவகைப்பட்ட பெயர்களைப் பயன்படுத்துகின்றனர். "சாமி, மாமா, துரைமகனே, அடே, திலக மச்சானே, தங்க மாமாவே, ஆசை மச்சானே, பொன்னையா, என் தங்கையா" என்று ஆடவர்கள் பெண்களால் ஆசையாக அழைக்கப்படுகின்றனர். அதோடு பெண்களை, 'குட்டி, ராசாத்தி, கண்ணம்மா, கண்ணாட்டி, சண்டாள கிறுக்கி, வாயாடி மகளே, சண்டாளி மகளே" என்று ஆடவர்கள் அன்பாக விளிக்கிறார்கள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

இங்கு கீழ்காணும் பாடல் அடிகள் இரண்டு மனைவிகளை வைத்திருந்த கணவனின் நிலையை எடுத்துக் கூறுகிறது. அக்குடும்பத்தில் மூவரது மனநிலைகளும் வெவ்வேறாக, ஒன்றுக்கொன்று, ஒத்துப்போகாத, முரண்பாடான, சூழலையும், நிகழ்வுகளையும் கொண்டிருந்தன என்பதற்கு சான்றாக, 'கீதாரி' புதினத்தில் சாம்பசிவம் என்னும் பாத்திரத்தின் இரு மனைவியர் எதிர்ப்பாட்டுப் பாடுவது அவர்களின் வெறுப்புணர்வைக் காட்டுகின்றது. மூத்தவள் பாடுகின்றாள்,

"பொரிய பொரிச்சிவச்சி நீ

பொளுதிருக்க செத்திருந்தா

பொரிய தின்னுபுட்டு -நா

போதரவா மாரடிப்பேன்...

அவுல இடிச்சிவச்சி -நீ

அந்திசாய செத்திருந்தா

அவுல தின்னுப்புட்டு -நா

ஆதரவா மாரடிப்பேன்

எளும்பி நின்னு மாரடிக்க – நீ

என்ன வச்ச ஏதுவச்ச

பொத்த ஓரல வச்ச

பொளக்கடயில் பேணுவச்ச...,26

இறப்பு நிகழ்ந்த வீடுகளில் அவ்வீட்டிற்கு உரியோர் பிணத்தை எடுத்துச் செல்லும் வரையில் எதையும் உண்ணமாட்டார்கள். ஆனால் இப்பாடலில் இளையவள் இடித்து வைத்த 'அவலும் பொரியும் இருந்தால் அதைத் தின்றுவிட்டு ஆதரவாக மாரடிப்பேன்' என்று பெரியவள் பாடுகின்றாள். இதன் மூலம் இளையவள் மீது பெரியவள் கொண்டிருந்த வெறுப்பும் புலப்படுகின்றது.

இதைக்கேட்ட இரண்டாம் மனைவி பாடுவதிலிருந்து முதல் மனைவி மீது இவள் கொண்டிருக்கும் எண்ணம் புலப்படுகின்றது.

"அடி சுண்ணாம்பு கலயத்துல

சோறாக்கி வச்சவளே....

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

சுடுகாட்டு மண்டையில
யாம் புருசனுக்கு போட்டவளே...
நோயும் உனக்கு நொடில வந்துடுமா?
சாவும் உனக்கு சட்டுன்னு வந்துடுமா...?
என்னையும் மன்னரையும் -நீ
எடுத்து முளுங்குறவ
எத்தி பொளக்கிறவ
எமனுக்கும் அஞ்சாதவ....27

இப்பாடல் ஒருவருக்கொருவர் குறைசொல்வது போல அமைந்துள்ளது. இப்பாடலில் துன்பியல் இல்லை. பாடுவோரின் உள்ளக் குமுறல் புலனாகிறது.

இதற்கு எது காரணம்? இந்த வினாவிற்குரிய விளக்கத்தை, **"ஒரு பக்கம் இல்லாள். மறுபக்கம் புல்லாள். இருபுறமும் அடிபட்டென்! மத்தளம் போலக் காமக்கிழத்தியனுக்குப் பெருமையுண்டா? இல்லை. சிறுமையுண்டு. மத்தளம் அடிபட்டதினால் சமூகம் சாந்தமடைந்தது. மகிழ்ச்சியடைந்தது. வைப்பாட்டியன் அடிப்பட்டதினால் சமூகம் பரபரப்படைந்தது; மதிப்பிழந்தது"28** என்ற வரிகளில் காணலாம்.

முடிவுரை

நாட்டார் பாடல்கள் நாட்டாரோடும் அவர்களின் வாழ்வோடும், "செம்புலப் பெயல்நீர் போலப்" பின்னிப் பிணைந்தவை.

'விளையாட்டுப் பாடல்கள்'கேலி உணர்வு, நகைச்சுவை உணர்வு, உறவுகளுக்கு இடையிலான உரிமை உணர்வு, நாட்டார் சிறுவர்களின் ஒற்றுமை உணர்வு, புத்திக்கூர்மை, உழைத்து உண்ணல் என்னும் கொள்கை ஆகிய இயல்புகளைக் கொண்டுள்ளன. இப்பாடல்கள் சிறுவர்களின் மனம், குணம், எண்ணம்,விருப்பம் ஆகியனவற்றைப் புலப்படுத்தும் வகையிலும் அமைகின்றன.

'ஒப்பாரிப் பாடல்கள்' பாடுவது. பெண்ணிகளின் தனிப்பட்ட வாழ்வின் அவலங்களையும் உள்ளக் குமுறல்களின் வடிகாலாக அமையும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

சு.தமிழ்ச்செல்வியின் 'அளம், கீதாரி' புதினங்களில் இடம்பெற்ற நாட்டார் பாடல்கள் இவருடைய பாடல்கள் தேடும் திறனையும் அவைகளை இரசிக்கும் ஆர்வத்தினையும், கதைப்போக்கிற்கு ஏற்ப பயன்படுத்தும் புலப்பாட்டுத் திறனையும் பறைசாற்றுகின்றன. மறைந்தும் அழிந்தும் போகும் நிலையை நோக்கிப் பயணிக்கும் நாட்டார் பாடல்களை இப்புதினத்தில் இடம் பெறச்செய்வது அவற்றை ஆவணப்படுத்தும் முயற்சியாகவே தோன்றுகின்றது.

இப்பாடல்கள் பெண்களின் ஆதரவுக் குரலாகவும் ஆண்களின் எதிர்ப்புக் குரலாகவும் பிரதிபலிக்கின்றன. சு. தமிழ்ச்செல்வியின் இப்புதினங்களில் இடம்பெற்ற நாட்டார் பாடல்கள், நாட்டாரின் உணர்ச்சிகள், கனவுகள், சவால்கள், கற்பனைகள் போன்றவற்றை வெளிக்கொணரும் அகப்பரிமாணங்களாக அமைகின்றன எனலாம்.

அடிக்குறிப்புகள்

1 ச. மெய்யப்பன் (பதி), பாரதியார் கவிதைகள், ப. 264.

2. மேலது,ப. 263.

3. மேலது, ப 255-256.

4. இளம்பூரணர் (உரை), தொல்-பொருள்-செய்.நூ., 74.

5. மேலது, நூ.173.

6. தமிழ்ப் பேரகராதி, (தொ. IV), ப. 573.

7. சித்பவானந்தர் (உரை), 'திருவம்மானை', 'திருவாசகம்', பா. 6.

8. தே.லூர்து,நாட்டார் வழக்காற்றியல் கள ஆய்வு, ப. 2.

9. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறவியல் ஆய்வுகள் (தொ. 2), ப. 3.

10. Sankar Sen Cupta, Folk lore and Folk Life in India, p. 26.

11. சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புற இயல், ப. 13.

12. மேலது,ப. 14.

13. கலைக்களஞ்சியம் (தொ. 6), பக். 382-383.

14. நா. வனமாமலை (தொ.ஆ.), தமிழர் நாட்டுப்பாடல்கள், ப. 5.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :2 /Issue 2 / MAY 2025 eISSN 3049-3676 (Online)

15. சு. தமிழ்ச்செல்வி, அளம், ப. 45.
16. சு. சண்முகசுந்தரம், மூங்கில் இலைமேலே, ப. 48.
17. சு. தமிழ்ச்செல்வி, கீதாரி ப.118.
18. Encyclopaedia Britanica, Vol. VI, p. 517.
19. சு. தமிழ்ச்செல்வி, அளம், ப. 35.
20. மேலது,ப. 127.
21. சு. சண்முகசுந்தரம், திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள், ப. 127.
22. சு. தமிழ்ச்செல்வி, அளம், ப. 179.
23. தமிழ் அகராதி (தொ.I), ப. 594.
24. V. Viswanathapillai, A Tamil English Dictionary, p. 473.
25. அ.கி. நாயுடு, திரு தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம், ப. 377.
26. சு. தமிழ்ச்செல்வி, கீதாரி பக்.87-88.
27. மேலது,ப. 88.
28. அ.கி. நாயுடு, திரு தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம், ப. 376.